மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) விலிருந்து (எ) வரை கல்வித் துறையால் 5—1—1978-ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 30ஐ அமுல்படுத்துவது தொடர்பாக மாநில கணக்காயர் அலுவலகத்திலிருந்து சில விளக்கங்கள் கோரப்பட்டன. இவ்விளக்கங்கள் கல்வித் துறையால் 25—5—1982-ல் வெளியிடப்பட்ட அரசாணை எண் 1012-ல் அளிக்கப்பட்டன. இதன் காரணமாக, கல்வித் துறை அரசாணை எண் 30ஐ அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இதுபற்றி அரசுக்கு முறையீடு ஏதும் வரவில்லை.

Pay Scales of Wakf Board Employees.

* 108. *Q.*—Tiru S. J. SADIQ PASHA : Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to revise the scales of pay of the employees of the Wakf Board; and

(*b*) the annual financial commitment of the Wakf Board for the employees' salary ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதங்கள் தமிழ்நாடு வக்ஃபு வாரியப் பணியாளர்களுக்கும் அனுமதிக்கப்படுகிறது. எனவே அவர்களது சம்பள விகிதங்களைத் திருத்தியமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

(இ) 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 8.71 இலட்சம்.

(முற்பகல் 10-10)

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய ஊதிய விகிதத்தை அவர்களுக்கும் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு. அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல, ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை மற்றும் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் கொடுக்கும் பத்தாயிரம் ரூபாய் ஆகியவை கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவற்றைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

அவர்கள் இப்போது வாங்கும் சம்பளம் குறைவு என்றும் சொல்லுகிறார்கள். குறிப்பாக மாவட்டங்களில் பணியாற்றக்கூடிய இன்ஸ்பெக்டர்கள், சூப்பரின்டென்டென்டுகள் ஆகியவர்களுக்குச் சம்பளம் முதல் தேதியன்று கொடுப்பதில்லை என்றும், பயணப்படிகூட வழங்குவதற்கு ஒன்றரை ஆண்டு ஆகிறது என்றும் சொல்லுகிறார்கள். இந்தக் குறைபாடுகளையும் நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : அரசு ஊழியர்களுக்குத் தருகின்ற ஓய்வூதிய வசதிகளைப் பற்றியும் மற்ற நன்மைகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினார். வக்ஃபு வாரிய ஊழியர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. இங்கேயுள்ள மூலக் கேள்வி வக்ஃபு வாரியப் பணியாளர்களின் சம்பள விகிதங்களைப் பற்றியது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அவர்களுடைய சம்பளத்தைப் பொறுத்த வரையில், தலைமை அலுவலகத்திலே பணியாற்றுகிறவர்களைப் பொறுத்த வரையில், அவ்வப்போது சரியாகத் தரப்பட்டிருக்கிறது. இதர மாவட்டத் தலைநகரங்களில் உள்ள அலுவலங்களைப் பொறுத்த வரையில், சம்பளம் சரியாகத் தருவதில்லை என்ற குற்றச்சாட்டு இதுவரை வரவில்லை. வக்ஃபு வாரியத்திற்குரிய பணத்தை வசூலிப்பதில் மாவட்டத்தைச் சார்ந்த அலுவலர்கள் ஒழுங்காக வேலை பார்த்தால், உரிய வருமானம் வரும். அப்படி வரக்கூடிய வருமானத்தைப் பெற்று வக்ஃபு வாரியம் சம்பளத்தை வழங்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சம்பளம் கொடுப்பது என்பது வேறு. கான்ட்ரிபியூஷனை (contribution) வசூல் செய்வது என்பது வேறு. ஒன்றரை ஆண்டுகளாகத் தரப்படாமல் இருக்கிற பயணப் படியையாவது ஒவ்வொரு மாதமும் பத்தாம் தேதிக்குள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் அங்கே பணிபுரியக்கூடியவர்கள் சாதாரண குடும்பத்தினர். ஆகவே அமைச்சர் அவர்கள் அதை கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : நன்றி. உரிய முறையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஜே. எம். மியாகான் : இந்த கான்ட்ரிபூஷன் வந்தால்தான், அவர்களுக்குச் சம்பளம் கிடைக்குமா என்று கேட்க விரும்புகிறேன். அதைப் பொறுத்துத்தான் சம்பளம் வழங்கப்படுகிறதா ? இதுதான் அவர்களுடைய பாலிசியா என்று அறிய விரும்புகிறேன். மற்ற வாரியங்களைப் போல ஒன்றாம் தேதி பிறந்தவுடன் சம்பளம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பாலிசி என்பதல்ல பிரச்சினை. அப்படிப்பட்ட பாலிசியை தனியாக அமைக்க முடியாது. வக்ஃப் வாரியத்தின் வேலையைக் கவனிப்பது, உரிய முறையில் வருகின்ற வருவாயில் குறிப்பிட்ட தொகையைப் பெறுவது, அதைப் பிரித்துக் கொடுப்பது, அதனுடைய பங்கிலிருந்து ஊழியர்களுக்குத் தேவையான சம்பளத்தைக் கொடுத்து கணக்குகளை வைப்பதில் ஈடுபடுவது ஆகியவைதான் அவர்களுடைய வேலை. அந்த முறையில் வருகின்ற வருவாயை வைத்துத்தான் சம்பளம் கொடுக்க முடியும். உள்ளாட்சித் துறையிலுள்ள ஊராட்சி பேரூராட்சிகளிலும் அப்படித்தான் இருக்கின்றன. ஆகவே அந்த அந்த நிலையில்தான் வக்ஃபு வாரியமும் செயல்படுகின்றது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

Regional Wakf Boards.

* 109. *Q.*—Thiru J. M. MIAKHAN and Dr. T. R. JANARTHANAM : Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to constitute Regional Wakf Boards; and

(*b*) if so, when they will start functioning ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) & (இ) 1954-ம் ஆண்டு மத்திய வக்ஃபு சட்டத்தில் மண்டல வக்ஃபு வாரியங்கள் (Regional Wakf Board) அமைப்பது எதும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் மண்டல குழுக்கள் (Regional Committees) அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, மேற்படி கருத்துரு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எம். மியாகான் : அப்போதுள்ள அமைச்சர் அவர்கள் இதே சபையில் அந்த மாதிரி ரீஜனல் வக்ஃபு போர்டு அமைப்போம் என்று வாக்குறுதியைத் தந்துள்ளார்கள். இதைக் கைவிட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.